ஈழநாதம்
EELANATHAM
மக்கள் நாளிதழ்
பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 20 | 04-03-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 14

வவுனியா நகரில் தரம் குன்றா
தங்க நகைகளுக்கு நம்பிக்கை
நாணயம் மிக்க நிறுவனம்
T.P: 024-22464
(சி-7652)
கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம்



# தேசியத் தலைவர் - அரசியல் ஆலோசகருடன்

# 2 ஆவது நாளாக அரசியல்நிலை குறித்து ஆராய்வு!

## எதிர்கால நடவடிக்கைகள் பற்றிப் பரிசீலனை

**தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களும், வன்னி திரும்பியுள்ள அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களும் இரண்டாவது நாளாக நேற்றும் அரசியல் நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்ததோடு எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் பரிசீலனை செய்தனர்.**

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் லண்டனிலிருந்து நேற்று முன்தினம் வன்னி திரும்பியுள்ளமையும், அன்றையதினமே தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தமையும் தெரிந்ததே. இந்நிலையில், இரண்டாவது நாளாக நேற்றும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களும்-அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும் சந்தித்து அரசியல் சூழ்நிலை

(08 ஆம் பக்கம் பார்க்க)

### வவுணதீவு இராணுவமுகாம் தாக்குதல்

## 103 போராளிகளின் நினைவுநாள் நாளை மறுதினம் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவமுகாம் தாக்குதலில் வீரச்சாவடைந்த லெப்.கேணல்.மதனா உட்பட 103 மாவீரர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினம் நாளை மறுதினம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று முதல் தரவை விளை

(08 ஆம் பக்கம் பார்க்க)

### யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின்

## தலைவர்கள் நாளை புலிகளைச் சந்திப்பர்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன்ட் புருவ் ஹொவ்டே நாளை வன்னிக்கு வருகைதந்து விடுதலைப் புலிகளைச் சந்திக்கவுள்ளார். இவருடன் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனும் வன்னிக்கு வருகைதந்து இச்சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளார்.

தற்போதைய கண்காணிப்புக் குழுத் தலைவர் இம்மாதம் ஓய்வு பெற்றுச் செல்ல புதிய தலைவர் 7ஆம் திகதி கண்காணிப்புக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கிளிநொச்சி ஏ - 9 வீதியில் துயரச் சம்பவம்

## உழவு இயந்திரச் சில்லுக்குள் நசியுண்டு இளம் குடும்பப் பெண் பரிதாப மரணம்

(அலுவலகச் செய்தியாளர்)

ஏ-9 வீதியில் கிளிநொச்சி நகரில் உழவு இயந்திரம் ஒன்று துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்த இளம் குடும்பப் பெண் ஒருவர் உழவு இயந்திரச் சில்லுக்குள் நசியுண்டு ஸ்தலத்திலேயே பலியானார். துவிச்சக்கர வண்டியில் வந்த மற்றையவர் படுகாயங்களுடன் மயிரிழையில் உயிர்தப்பினார். மூன்றாம் வாய்க்கால் கிளிநொச்சியைச் சேர்ந்த செல்வகுமார் கல்பனா (வயது - 20) என்பவரே இச்சம்பவத்தில் பலியானவராவார். இவருடன் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இவரது உறவினரே படுகாயங்களுடன் உயிர் தப்பியவராவார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று யுனிசெவ் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வன் சந்திப்பு

(அலுவலகச் செய்தியாளர்)

யுனிசெவ் பிரதிநிதிகள் இன்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றினை நடத்தவுள்ளனர். யுனிசெவ் நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெச் சைவன், வன்னிக்கான யுனிசெவ் வதிவிடப் பிரதிநிதி வெனிபுறூக் ஆகியோர் இன்று பகல் 11.00 மணிக்கு சந்திக்கவுள்ளதாகவும் இச்சந்திப்பில் போரினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு சிறுவர்களுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## ஜேர்மன் குழு பார்வையிட்டது

நலிவுற்ற கிறிஸ்தவ திருச்சபைகளுக்கு உதவும் ஜேர்மன் நாட்டு கிறிஸ்தவ நிறுவனக் குழுவொன்று போரினால் பாதிக்கப்பட்ட ஆலயங்களைப் பார்வையிட்டுள்ளது.

சமாதானச் சூழலில் மக்களின் வாழ்க்கை நிலை குறித்து நேரில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய-மன்னார் மீனவருக்கிடையில் பேசாலைக் கடலில் கைகலப்பு

### 64 இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்டனர்

(மன்னார்)

மன்னார் பேசாலைக் கடலில் அத்துமீறி மீன்பிடிக்க நுழைந்த தமிழக மீனவர்களுக்கும், மன்னார் மீனவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளதுடன் இந்திய மீனவர்கள் 64 பேர் சுற்றி வளைத்துப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் தமிழக மீனவர்கள் நால்வரும், மன்னார் மீனவர்கள் நால்வரும் படுகாயமடைந்து பேசாலை மற்றும் மன்னார் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், நேற்று மாலை 6.00 மணியளவில் மன்னார் கடற்பகுதிக்கு 15 ற்கும்மேற்பட்ட வள்ளங்களில் வந்த 65க்கு மேற்பட்ட தமிழக மீனவர்கள் அப்பகுதிகளில் அத்துமீறி மீன்பிடிநடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சிலர் எனக்கு விரோதமாகச் செயற்படுகின்றனர்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த ஒருசிலர் தனக்கு விரோதமாகச் செயற்படுகின்றனர் என்றும், அவர்களை எதிர்கொள்ளத் தான் தயாராக இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் வைத்து செய்தியாளர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடைந்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளத் தவறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க பொதுசன ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

கண்டியில் கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கூட்டத் தொடர்களில் சமுகமளிக்கத்தவறும் உறுப்பினர்களை பாராளு மன்றத்தில் இருந்து விலக்குவது என்றும் இந்தக் கூட்டத்தின்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

# ஜே.வி.பி - சுதந்திரக் கட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏன்?

## - சு.க. உறுப்பினர்களுக்கு விளக்கம்

ஜே.வி.பி. உடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொள்ள இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு சனாதிபதி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

இச்செயலமர்வு கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் இடம்பெற்றது.

சனாதிபதி சந்திரிகா இதற்குத் தலைமை தாங்கினார். இதன் போது சமஷ்டி ஆட்சிமுறை குறித்தும் பேராசிரியர் விஸ்வ வர்ணபால மற்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோர் இவர்களுக்கு விளக்கமளித்துள்ளனர்.

அத்துடன் எதிர் வரும் 10 ஆம் திகதி கொழும்பில் அரசுக்கெதிராக மேற்கொள்ளப்படவிருக்கும் போராட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

# தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் அமைக்க முயற்சி

(கொழும்பு)

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போதைய சமாதானச் சூழலில் தமிழ் மக்களின் பொதுவான பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்லவும், சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கவுமே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரெலோ முதல்வரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தை அமைக்கும் பூர்வாங்க முயற்சியில் ஈடுபடுகின்றார்.

இதேவேளை, இந்த முயற்சியை கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வரவேற்றுள்ளதுடன் இம்முயற்சிக்கு பூரண ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஆயுள்வேத வைத்தியசாலை

(அலுவலகச் செய்தியாளர்)

தருமபுரம் பகுதியில் இலவச ஆயுள்வேத வைத்திய சேவை செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இச்சேவை இன்று முதல் நடைபெறவுள்ளது என கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் அறிவித்துள்ளார். (அ)

## இரு கூட்ட அறிவிப்பு

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 10.00 மணிக்கு கல்விக் குழுக் கூட்டமும், 11.30 மணிக்கு சுகாதாரக் குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளன. (அ)

# சிறில. வில் மரண தண்டனையை மீண்டும் கொண்டுவர சட்டமூலம்

மரண தண்டனையை மீண்டும் கொண்டுவருவது தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் இம்மாத நடுப்பகுதியில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அமைச்சர் யோன் அமரதுங்க கருத்துக் தெரிவிக்கையில், இந்த சட்டமூலம் சம்பந்தமான விவாதம் முடிவடைந்ததுடன் சகல விதமான விபரங்களும் சனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் எனக் கூறியுள்ளார். இவற்றை ஆராய்ந்த பின்னர் சனாதிபதி இறுதி முடிவை எடுப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், மரண தண்டனையை மீண்டும் அறிமுகம் செய்வதன் அடிப்படையில் நாட்டில் அதிகரித்து வரும் கொலை, குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# தப்பியோடிய படையினரின் எண்ணிக்கை சமாதான வருடத்திலேயே அதிகம்

நாட்டில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியைவிட சமாதான காலப்பகுதியில் தான் இராணுவத்திலிருந்து தப்பியோடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் போர்நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்து அதனைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்புக்குழுவினரும் நாட்டுக்கு வந்த கடந்த ஆண்டில் மட்டும், 7300க்கும் மேற்பட்ட படையினர் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடும்போர் நடைபெற்று இழப்புகள் ஏற்பட்ட 2000ஆம் 2001ஆம் ஆண்டுகளில் படைகளிலிருந்து தப்பியோடியோரின் எண்ணிக்கையை விட கடந்த வருடம் படையிலிருந்து தப்பியோடியோரின் எண்ணிக்கை அதிகமாகும். 2000ஆம் ஆண்டில் 4,985 பேரும், 2001 ஆம் ஆண்டில் 5,902 பேரும் தப்பியோடியுள்ளனர்.

சராசரியாக வருடம் ஒன்றுக்கு 4,500க்கும் மேற்பட்ட படையினர் தப்பியோடுவதாகவும், எனினும் கடந்த வருடம் இத்தொகை ஏன் 7300ஐத் தாண்டியது என்பது தெரியவரவில்லை எனவும் பிரிகேடியர் சனத் கருணாரட்ன தெரிவித்துள்ளார். பொதுவாக சிலமாத சேவையின் பின்னர் விடுமுறையில் செல்லும் படையினர் ஒவ்வொரு வரும் தலா 45,000 ரூபாவை (சம்பளம்) கொண்டு செல்கின்றனர்.

இத்தொகை கிராமப்புற இளைஞர்களுக்கு மிகப்பெரிய தொகையாக இருப்பதால் அத்துடன் அவர்கள் நின்று விடுகின்றனர். இதுவரை இராணுவத்திலிருந்து 51,413 பேரும், கடற்படையிலிருந்து 4,255 பேருமென 60,501 படையினர் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

## மண்டூர், பாலமுனைப் பகுதியில்

# படையினர் வசமுள்ள வீடுகளை மீளப்பெற்றுத்தரக் கோரிக்கை

மட்டக்களப்பு மண்டூர் பாலமுனைப் பகுதிகளில் படையினர் வசமுள்ள வீடுகளை மீளப் பெற்றுத்தருமாறு குடும்பத் தலைவிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பான மகஜர்கள் பிரதேச செயலாளர் ஊடாக படை அதிகாரிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் யுத்த நடவடிக்கையினால் வீடுகளையும் உடைமைகளையும் இழந்து தற்போது அகதி முகாங்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் வாழும் பெருமளவு குடும்பங்களின் வீடுகள் இராணுவத்தினரின் வசமுள்ளன. அவற்றை மீளப் பெற்றுத்தருமாறு குடும்பத் தலைவிகள் மகஜர் கையளித்துள்ளனர்.

இம் மகஜரின் பிரதிகள் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஆர். மோனகுருசாமி, வெல்லாவெளி பிரதேச செயலர், காரைதீவு, களுவாஞ்சிக்குடி, மண்டூர் விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகள் ஆகியோருக்கும் கையளிக்கப்பட்டுள்ளன..

1990ஆம் ஆண்டு வற்புறுத்தலின் பேரில் எங்களின் வீடுகள் பாதிக்கப்பட்டன. வீட்டுத் தளபாடங்கள், பாவனைப் பொருட் கள் அனைத்தையும் படையினர் பறிமுதல் செய்தனரென குடும்பத் தலைவிகள் தெரிவித்துள்ளதோடு. அன்றிலிருந்து அகதிகளாக உறவினர் வீடுகளிலும், அகதி முகாங்களிலும் அன்றாட வாழ்விற்குத் தேவையான அனைத்தையும் இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றோம்.

இதனால் வளர்ந்த பெண்பிள்ளைகளின் திருமணங்கள் கூடத் தடைப்படுகின்றன. எங்களுக்கு வாடகைப்பணம் வேண்டாம். எங்களின் வீடுகளை மீளப் பெற்றுத்தர ஆவன செய்யுங்கள். பசிபட்டினியோடு வாழ்ந்தாலும் நிரந்தர இல்லத்தில் வாழ்வதே நிம்மதி என, மண்டூர், பாலமுனை இடம்பெயர்ந்த குடும்பங்களின் தலைவியர்களின் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய பாதுகாப்பு ஏற்பாட்டிலிருந்து நான்கு அமைச்சர்களுக்கு விதிவிலக்கு

அமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க புதிய அமைப்பொன்று ஏற்படுத்தப்படவுள்ளபோதிலும் நான்கு அமைச்சர்கள் முன்னர் வைத்திருந்த படையதிகாரிகளைத் தொடர்ந்தும் பாதுகாப்பிற்கென வைத்திருக்க அனுமதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் பாதுகாப்புப் பிரிவையும், அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவையும் ஒருங்கிணைக்கும் நடவடிக்கையிலிருந்து இந்த நான்கு அமைச்சர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளும் விதிவிலக்காகவே இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு விசேட அதிரடிப்படையினரே பாதுகாப்பு அளிக்கின்றனர். அமைச்சர் தொண்டமான் விமானப்படையினரை பாதுகாப்பிற்கு வைத்திருக்கின்றார்.

அமைச்சர் ஹக்கீம் வட-கிழக்கு செல்லும்போது மட்டும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பைப் பெறுகின்றார். அமைச்சர் தொண்டமான் தமது தனிப்பட்ட பாதுகாப்புப் பிரிவினரை மாற்ற இணக்கம் தெரிவிக்கவில்லை. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் முன்னர் போன்றே இராணுவ கொமாண்டோக்களை தமது பாதுகாப்பிற்குத் தொடர்ந்து வைத்துள்ளார்.

## அவசர கலந்துரையாடல்

முல்லை வலயத் தொண்டர் ஆசிரியர்களுக்கும், ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு மு/ கொக்கிளாய் அ.த.க.பாடசாலையில் இடம்பெறவிருப்பதால் அனைவரையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்துடன் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுக்கொள்கிறார்.


41 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

**திரு. சண்முகம் இராஜேஸ்வரன்**

**(முன்னாள் வெட்சி தையலக உரிமையாளர், கிளிநொச்சி.)**

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் வார்த்தைகள் கூறியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் பலவகைகளில் உதவிகளும் செய்த கிளிநொச்சி TRO மற்றும் கூட்டுறவுப் பகுதி, கிருஷ்ணபாரதி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்ப சார்பில். அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள 41 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

றொபட் முன்பள்ளி அருகாமை,
கிருஷ்ணபுரம், கிளிநொச்சி. (சி-7695) **குடும்பத்தினர்.**



31 ஆம் நாள் நினைவஞ்சலி

**பூராசா கிறேசியன்**

மண்ணில் 29-09-2002 — விண்ணில் 02-02-2003

03.02.2003 அன்று எமது மகனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

04.03.2003 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல: 25,
பெரியகுளம், கண்டாவளை. (2994) **அ. பூராசா (தந்தை),**
**அ. அன்ரனி (போராளி)**

# ஐ.நா.சபை ஈராக் விவகாரத்தில் இறப்பர் முத்திரையாக மாறக்கூடாது

## பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் கருத்து

**ஈராக் தொடர்பான விவகாரத்தில் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தைப் பெற்றுள்ள பிரான்ஸ் தொடர்ந்தும் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வருகிறது. ஐ.நா. இது விடயத்தில் இறப்பர் முத்திரையாக இருக்கக்கூடாது என பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் டொமினிக் டிவில்லிபின் தெரிவித்துள்ளார்.**

ஈராக் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஒரு முடிவுக்கு வருவதில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுகிறது. இது குறித்து தொடர்ந்தும் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்று வருகின்றன.

அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஈராக் குறித்த இரண்டாவது தீர்மானத்தை சமர்ப்பிக்கவுள்ள நிலையில் இந்த ராஜதந்திர முயற்சி எவ்வாறு அமையப் போகிறது என்பதே தற்போதைய கேள்வியாக வுள்ளது.

பாதுகாப்புச் சபையிலுள்ள பதினைந்து அங்கத்துவ நாடுகளில் ஒன்பது நாடுகளின் வாக்குகள் தீர்மானத்திற்கு தேவையாகவுள்ள நிலையில் அது கைகூடுவதில் சந்தேகம் வெளியிடப் பட்டுள்ளது.

ஸ்பெயின் நாடு மட்டும் பகிரங்கமாகத் தீர்மானத்திற்கு ஆதரவு தருவதாக அறிவித்துள்ளது. எனினும் பிரான்ஸ் தனது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாகவுள்ளது.

பி.பி.சி. தொலைக்காட்சி சேவைக்கு பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் டொமினி டிவில்லிபின் அளித்த பேட்டியி ஐ.நா. வின் புதிய தீர்மானத்திற்கு தமது நாடு எதிர்ப்புத் தெரிவிப்பதாக வலியு றுத்தியுள்ளார்.

ஐ.நா. எந்தத் தீர்மானத்தையும் எடுக்கும் வகையில் ரப்பர் முத்திரையாக இருக்கக்கூடாது. நாம் எமது நிலைப்பாட்டில் உறுதியுடன் இருந்து வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ள இதர நாடுகளும் போருக்கு ஆதரவாகக் கருத்துக்களை தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



மேற்குக்கரை நகரமான நேப்லஸில் ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனின் உருவப்படத்தையும் போலி ஏவுகணையையும் ஏந்தியவாறு அமெரிக்காவுக்கெதிராக ஊர்வலம் போகும் பலஸ்தீனர்கள்.

## புஷ்ஷின் கொள்கையை எதிர்த்து இராஜதந்திரி இராஜினாமா

ஈராக் மீதான புஷ் நிர்வாகத்தின் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிரேஷ்ட அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

புஷ்ஷின் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இராஜதந்திரி ஒருவர் தனது பதவியை இராஜினாமா செய்த முதல் சம்பவம் இதுவாகும்.

இந்த இராஜதந்திரி பல இடங்களில் கடமையாற்றி 20 வருடகால அனுபவம் உள்ளவராவார்.

## அமெரிக்கப் போரினை ஆட்சேபித்து பாகிஸ்தானிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### - பத்து இலட்சம் மக்கள் பங்கேற்பு

ஈராக் மீதான அமெரிக்க யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தானிலும் லட்சக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். கராச்சியில் நேற்று முன்தினம் மிகப் பெரியளவிலான ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.



மில்லியன் மார்ச்' எனப்படும் இவ் எதிர்ப்பு அணியில் மேலும் ஆயிரமாயிரம் மக்கள் வீதி எங்கும் கூடி அமெரிக்காவுக்கு எதிராக போர்க் கொடி ஏந்துவர் என தாம் நம்புவதாக ஆர்ப்பாட்டப் பேரணி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கராச்சியில் இடம் பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சுமார் பத்து இலட்சம் பாகிஸ்தானியர்கள் கலந்து கொண்டிருந்ததாக பி.பி.சி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## இடதுசாரிகள் வெற்றி

எஸ்தோனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இடதுசாரி மத்திய கட்சி வெற்றிபெற்றுள்ளது. வாக்களிக்கப்பட்ட மொத்தவாக்குகளில் 25 சதவீத வாக்குகளையும் இந்தக் கட்சி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## சூரிச் நகரிற்கு முதலிடம்

உலகில் உள்ள நகரங்களில் சிறந்த வாழ்க்கைத் தரம் பெற்ற நகரமாக சுவிஸ்லாந்தின் சூரிச் நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மனித வள ஆய்வு நிலையம் உலக நாடுகளிலுள்ள 215 நகரங்களில் இது சம்பந்தமான ஆய்வுகளையும் மதிப்பீடுகளையும் நடத்தியுள்ளது. கனடாவின் வன்கூவர் நகரமும் சரித்திர பிரசித்தி பெற்ற வியட்னாம் நகரமும் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளன. ஜெனிவா, பிஜி நகரங்கள் மூன்றாம் இடத்தில் உள்ளன.

அதே சமயம் ஆபிரிக்க நகரங்கள் பலமிக மோசமான வாழ்க்கைத்தரத்தினைக் கொண்ட நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## பிணைமனு நிராகரிப்பு

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் உட்பட ஐவர் தாக்கல் செய்த பிணைமனுக்கள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தால் பிணை மனுக்களை நிராகரிப்பதாக நேற்று அறிவித்தது.

## இணக்கம் தெரிவிக்காமையால் அமெரிக்கா பெரும் கவலை!

ஈராக் போரிற்கு அமெரிக்காவுக்கு உதவ துருக்கி இன்னமும் இணக்கம் தெரிவிக்கவில்லை என அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

நேட்டோ கூட்டணியில் இடம் பெறும் துருக்கியிடம் 60,000 படையினரை நிறுத்த அனுமதிக்குமாறு அமெரிக்கா கேட்டிருந்தது.

ஈராக் மீதான வடக்குப் பகுதியில் துருக்கியின் உதவி அமெரிக்காவுக்குத் தேவை என்றும், இதற்கான மில்லியன் டொலரான இழப்பீட்டை அமெரிக்கா வழங்கும் என்றும், கூறியிருந்தார்.

ஆனால், துருக்கி இதுவரை இணக்கத்திற்கு வரவில்லை என்பதையிட்டு, துருக்கிக்கான அமெரிக்கத் தூதர் தமது ஏமாற்றத்தை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.



101வது விமானப் படைப்பிரிவைச் சேர்ந்த படையினர் வளைகுடா யுத்தப் பகுதிக்கு கொண்டு செல்ல ஆயுத தளபாடங்களை விமானத்தில் ஏற்றுகிறார்கள்.

## நைஜீரிய அரசுக்கு கிளர்ச்சியாளர் ஏழுநாள் கால அவகாசம் வழங்கல்

### - பொருளாதாரப் பின்னடைவு குறித்து அச்சம்

நைஜீரியாவில் கிளர்ச்சிவாதக் குழுவினர் தங்களது கோரிக்கைகள் 07 நாட்களுக்குள் நிறைவேற்றப்படாது விட்டால் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என நைஜீரிய அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தங்களது பிரதேசத்திலிருந்து அரசாங்கப்படையினர் வெளியேற வேண்டும் எனவும் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை மீளமைக்கப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குறித்த காலப்பகுதிக்குள் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விட்டால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு எண்ணெய்த் தொழிலாளர்கள் கடத்தப் படுவார்கள் எனவும், வாகனங்கள் கைப்பற்றப்படும் எனவும், பெற்றோலிய நிறுவனங்களின் வேலைகள் சீர்குலைக்கப்படும் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நைஜீரிய சனாதிபதிக்கு இந்த விடயம் தொடர்பாக கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளனர். 15 வருடகால இராணுவ ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் 1999 ஆம் ஆண்டில் ஒபசஞ்சோ சனாதிபதியாகப் பதவியேற்றிருந்தால் அதனைத் தொடர்ந்து ஆட்களை கடத்துதல், கட்டடங்களை சேதப்படுத்துதல், வாகனங்களைக் கைப்பற்றுதல் போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவென ஆயிரக்கணக்கான அரச படையினர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

## காஷ்மீர் மக்களின் போராட்டம் சுதந்திரத்திற்கானதென உணரவேண்டும்

### - பாகிஸ்தான் சனாதிபதி பதிலுரை

காஷ்மீரில் வாழும் மக்கள் தமது சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றார்கள் என பாகிஸ்தானிய சனாதிபதி பர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை மீண்டும் மீண்டும் காரணமாகத் தெரிவித்தாலும் இந்தியா காஷ்மீர் மக்கள் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதை உணர வேண்டும் என பாகிஸ்தானிய சனாதிபதி முஷாரப் இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இவரது இக்கருத்துக்கு இந்திய மத்திய செய்தித் தொடர்பாடல் அமைச்சர் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார். காஷ்மீர் மாநிலத்தில் எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தூண்டி வருவதை இதுவரையும் மாற்றிக்கொள்ள வில்லை என்றும் இதனால் இந்தியா கோரியிருந்த 20 தீவிரவாதிகளையும் பாகிஸ்தான் ஒப்படைக்க மறுத்துவிட்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வலுவிழந்தோர் வாழ்விற்கு

# ஒளியேற்றும் 'வெண்புறா'

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் ஆரம்பத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வந்துள்ளது. இடப்பெயர்வுகள், பொருளாதாரத்தடைகள் என்பவற்றுக்கு மத்தியில் எமது பணியினை முன்கொண்டு சென்றோம். தற்போதுள்ள சூழல் எமது



வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைந்துள்ளது.

வலுவிழந்தோர் வாழ்விற்கான பல்வேறு திட்டங்களையும் செயற்படுத்தி வருவதோடு, மேற்கொண்டும் பல செயற்பாடுகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம்-என வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவன தலைமைப் பணிமனையின் நிர்வாக அலுவலர் சந்திரசேகரம்பிள்ளை தெரிவித்தார்.

அவருடனான நேர்காணலை கீழே தருகிறோம்.

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?அதன் ஆரம்பகால செயற்பாடுகள் எவை?

வெண்புறா நிறுவனமானது 1994இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியன் அவர்கள் இதை முன்னின்று ஆரம்பித்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் தான் இது செயற்பட ஆரம்பித்தது. மூன்று குறிக்கோள்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. வலுவிழந்தோர் மத்தியில் உதவிகளைச் செய்யவேண்டும் எந்தவேளையிலும் வலுவிழந்தோருக்கு எல்லா வகையிலும் நன்மை செய்யவேண்டும் என்ற குறிக்கோளுடன் சமூகத்திலே வலுவிழந்தோர் ஒதுக்கிவைக்கப்படக்கூடாது. அவர்களுக்கு ஏற்ற புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் வாழ்க்கைத் திறனை உயர்த்தக்கூடிய வகையில் என்ன செய்யலாம் என அறிந்து அவரவர்களுக்கு ஏற்ற தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன்முக்கிய நோக்கமாகும்.

ஆரம்பத்தில் வெண்புறா நிறுவனத்திற்கு ஏற்பட்ட நெருக்கடிகளை கூறுவீர்களா?

1995ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வன்னியில் காலடி எடுத்து வைத்தது. கிளிநொச்சிக்கும் அங்கிருந்து உயிலங்குளத்திற்கும் பின் புதுக்குடியிருப்புக்கும் இடம் பெயர்ந்து கைவேலிக் கிராமத்தில் 1996 ஆண்டில் தனது சேவையினை ஆரம்பித்தது.

புதுக்குடியிருப்பில் இயங்க ஆரம்பித்தவேளை அதன் வேலைத்திட்டம் தொடர்பாகக் கூறுவீர்களா?

ஜெய்ப்பூர் செயற்கைக் கால்களை தயாரித்து வந்தோம் பொருளாதாரத்தடை காரணமாக உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டும், இந்தியாவில் இருந்து செயற்கைப்பாதங்களையும் பெற்று இரண்டுவகையில் கால்களை உற்பத்தி செய்தோம். இதில் 80 வீதமானகால்கள் முழங்கால்களுக்கு கீழேயும் 20 வீத கால்கள் முழங்கால்களுக்கு மேலாகவும் உற்பத்தி செய்தோம். இதற்கு அதிகளவு மூலப்பொருட்கள் தேவை ஏற்பட்டது. இதில் ஓரளவேனும் கால்களை உற்பத்தி செய்து வழங்க முடிந்தது.

ஆரம்பகாலத்தில் வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவனம் எதிர்நோக்கிய பிரச்சினை எவ்வாறாக இருந்தது?

மூலப்பொருட்கள் கிடைக்காதது ஒன்று கிடைத்த பொருட்களை இங்கு எடுத்துவர முடியாத பொருளாதாரத்தடை ஒன்று, மூலப் பொருட்கள் கூடுதலான விலை. தமிழர்புனர்வாழ்வுக்கழகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கெயார்., யு.என்.எச்.சி.ஆர். நிறுவனங்களின் நிதி உதவிகளுடனே இதன் செயற்பாடுகளை முன்னெடுத்தோம் இருந்தபோதும் அந்நிறுவனங்களால் மூலப் பொருட்களை எடுத்துவரமுடியவில்லை. பொருளாதாரத்தடையே இதற்கு காரணமாக இருந்தது. அப்படி இருந்தும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் அனுசரணையுடனே சில பொருட்களை வேறு இடங்களில் பெற்றும் தோல்வகை, தகரம், பெயின்ற் ஆகிய பொருட்களும் அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றும் செயற் பட்டோம்.

உங்கள் நிறுவனத்தின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட உறுப்புக்களின் விபரத்தினைக் கூறுவீர்களா?

1994-1995 ஆண்டில் 367 செயற்கைக்கால்களை யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்தோம் இடம்பெயர்வினால் வன்னியில் 1996ஆம் ஆண்டில் மூலப்பொருட்களின் தட்டுப்பாட்டால் 66கால்களையும் 1997ஆம் ஆண்டில் 61 கால்களையும் அடுத்து 1998ஆம் ஆண்டில் 144கால்களையும் உற்பத்தி செய்தோம். பின்னர் ,மூலதனப் பற்றாக்குறையினால், 1999இல் பின்னடைவினை எதிர்நோக்கினோம். இதில் 83கால்களை உற்பத்தி செய்யமுடிந்தது. அதன்பின்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்க ஆரம்பித்ததை அடுத்து உற்பத்தில் மாற்றம் ஏற்பட்டது. 2000ஆம் ஆண்டில் 161 கால்களையும் 2001 ஆம் ஆண்டில் 301 கால்களையும் உற்பத்தி செய்யமுடிந்தது. அந்த வகையில் யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவு அதிகரிக்கத் தொடங்கியது. இந்த வகையில் முச்சக்கரவண்டிகள், சக்கரநாற்காலிகள், 100க்கு மேற்பட்ட ஊன்று கோல்களையும் 2001இல் உற்பத்தி செய்யமுடிந்தது. அதன்பின் 2002இல் சமாதான சூழ்நிலைக்குப் பிற்பாடு நாங்கள் மூலப் பொருட்களை இறக்குமதிசெய்யவும், வேறு நிறுவனங்களிடம் இருந்து உதவிகளைப் பெறவும், மற்றும் அயல் நாட்டு உதவிகளையும் பெற முடிந்தது. யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவு அதிகளவு எங்களுக்குக் கிடைத்தது.

**நேர்காணல்: அமலன்**

2002 ஆம் ஆண்டின் பிற்பாடு வெண்புறா நிறுவனத்தின் வளர்ச்சி பற்றி கூறுங்கள்.?

343 கால்களையும், 2003 ஆம் ஆண்டில், முச்சக்கர வண்டிகள் 30, 85 சக்கர நாற்காலிகளை உற்பத்தி செய்து வழங்க முடிந்தது.

தற்போது வெண்புறா நிறுவனத்தால் கண்ணி வெடி விழிப்புணர்வுச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் செயற்பாடு பற்றிக் கூறுவீர்களா?

கண்ணி வெடிகளில் சிக்கும் மக்கள் அதிகளவில் பெருகிக் கொண்டு போவதை அடுத்து எங்கள் நிறுவனத்தால் ஈடு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.அந்த நேரம் யுனிசெவ்வின் ஆலோசனைப்படி மக்களுக்குக் கண்ணி வெடிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இதில் அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்க முற்படுவார்கள், அத்தோடு செயற்கை உறுப்புக்கள் பொருத்த வேண்டிய நிலை குறையும் என தெரிவித்தார்கள். அந்த வகையில் 2003ம் ஆண்டு, காலாண்டுப் பகுதியில் கண்ணிவெடி விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை ஆரம்பித்தோம். இத்திட்டத்தில் 200 க்கு மேற்பட்ட விழிப்புணர்வு ஆசிரியர்களை உருவாக்கி திட்டத்தை விரைவுபடுத்தி செயற்படுத்தினோம். அந்த வகையில் பாட சாலை ரீதியாக வும், கிராம ரீதியா கவும் கருத்தரங் கினை துரிதப் படுத்தினோம். இது எங்களைப் பொறுத்த வரை பெருமளவு வெற் றியினைப் பெற் றோம். இதனை அடுத்து வெடி பொருட் களின் விபத்துக்கள் 75வீதம் குறை க்க முடிந்தது.



வெண்புறா நிறுவனத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வளர்ச்சி பற்றிக் கூறுவீர்களா?

நவீன தொழில் நுட்பத்தைப் பெற முடிந்தது.இதில் ஜேர்மனில் இருந்து பைவர் கிளாஸ் மூலப் பொருட்களையும்,லண்டனிலிருந்து பிளாஸ்ரிக் மூலப் பொருட்களையும் பெற்று உறுதியாகவும்,நீண்ட காலம் பாவிக்கக் கூடியவாறு உறுப்புக்களை உற்பத்தி செய்ய முடிந்தது. அத்தோடு வெவ்வேறு நாடுகளில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளைகள் ஊடாக இயந்திரங்களை அன்பளிப்பாகத் தந்ததுடன் இதனை இயக்குவதற்கு ஆசிரியர்களையும் தந்து பயிற்சியினை அளித்தனர். இதன் மூலம் இன்று எமது நிறுவனம் பழைய முறையினைக் கைவிட்டு புதிய தொழில் நுட்பத்தைக் கொண்டு போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடியவாறு பொருட்களை உற்பத்தி செய்ய முடிந்ததுடன் சர்வதேசத்துக்கும் கொண்டு போக முடிந்தது.

உங்கள் நிறுவனத்துக்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறதா?

தற்போது 9பேர் உள்ளனர். தொழில்நுட்பவியலாளர்கள் தேவையாக உள்ளது. இதில் கால்களைச் செய்யக்கூடியவர்கள், தையல் வேலை செய்யக்கூடிய வர்கள், பெயின்ற் வேலை செய்யக்கூடியவர்கள், திருத்த வேலையினைச் செய்யக்கூடிய வர்கள், மொத்தமாக 20 பேர் ஈடுபடவேண்டும், தற்போது ஜேர்மன், லண்டன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உறுப்புகளைச் செய்வதற்கு பயிற்சியில் ஈடுபடுத்தலை அதிகரித்தல் வேண்டும்.

வெண்புறா செயற்கைக்கால் உறுப்பு நிறுவனத்தின் கிளைகள் எங்கு இயங்கிவருகின்றன?

கிளிநொச்சி, யாழ்ப் பாணம், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

தற்போது எத்தனை பேருக்கு செயற்கைக்கால் பொருத்தப்பட்டுள்ளது? எத்தனைபேர் பொருத்து வதற்கு விண்ணப்பித்துள்ளனர் ?

1540 பேருக்கு கால்கள் வழங்கப்பட்டுள்ளன. 350 பேர் புதிய கால்களை போடுவதற்கு விண்ணப்பித்தும் உள்ளனர்.

செயற்கை உறுப்புச் செய்வ தற்கு மூலப்பொருட்கள் கொண்டு வருவதில் தடைகள் ஏற்படுகிறதா?

இதற்குத் தடை என்று இல்லை. மூலப்பொருட்களைக் கொண்டு வருவதற்கு அதிக செலவினைக் கொடுக்கவேண்டி யுள்ளதால் இதற்குத் திட்டம் ஒன்றை வகுத்தால், ஒருபொருளை வெளிநாட்டில் 1000ரூபாவுக்கு வாங்கினால் எடுத்துவருவதற்கு செலவு 1500ரூபா தேவைப்படுகிறது. பொருளைவிட போக்குவரத்துச் செலவே அதிகளவில் இருக்கிறது. இதனை நிவர்த்தி செய்ய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

வலுவிழந்தோருக்கு வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்தினால் மேற்கொண்டு வரும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றிக் கூறுவீர்களா?

அவர்களுக்கு பல புனர் வாழ்வுத்திட்டம் வகுத்துள்ளோம். இதில் வியாபாரம், சிறுதொழில் வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளோம். இதில் 200க்கு மேற்பட்ட வலுவிழந்தோர்கள் பயன்பெற்றுவருகின்றனர். அத்தோடு 100 பேருக்கு கல்வி வசதி செய்து கொடுத்துள்ளோம். இரண்டு பகுதிகளாகப் பிரித்து அவர்களில் வலுவிழந்த சிறுவர்கள், வலுவிழந்த பெற்றோர்களின் சிறுவர்கள் எனப் பிரித்து வருமான அதிகரிப்புத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளோம். அத்தோடு வன்னியில் 10 தொடர்பகங்கள் ஊடாக வலுவிழந்தோருக்கு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது.

வெண்புறா நிறுவனத்தின் 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள வேலைத்திட்டம் தொடர்பாகக் கூறுவீர்களா?

இருபது இலட்சம் ரூபா நிதியில் விழிப்புணர்வுப்பணியினை நடாத்தவுள்ளோம். பாடசாலை: கிராமரீதியிலான விழிப்புணர்வு, மிதிவெடிகள் இருக்கும் இடத்தை சுட்டிக்காட்டும் பலகை, கட்டுரை, சித்திரம் வரைதல் போட்டிகள், மேலதிக பயிற்சி மற்றும் 500 பேருக்கு கல்வி வசதியினை ஏற்படுத்தவுள்ளோம். வலுவிழந்த பெண்களுக்கு தொழில் வாய்ப்புக்கும் மற்றும் மீன்பிடிப்பதற்கும் உபகரணம் வழங்கத்திட்டம் வகுத்துள்ளோம். இதற்கு புனர்வாழ்வுக் கழகம் அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.


# ஒளியியல் சேமிப்புக் கருவிகள்

**சே**மிப்பகங்கள் கணினியில் இன்றியமையாத ஒரு பகுதியாக அமைந்ததையடுத்து, சிறிய உபகரணம் மூலம் பெருமளவு விடயங்களைச் சேமிப்பதற்கான கருவிகளை அமைக்க, ஆராய்ச்சிகள் தொடர்ந்தன. விலைகுறைவானதாகவும் அதேவேளை பெருமளவிலான தகவல்களைச் சேமிப்பதற்கான கருவிகளின் கண்டுபிடிப்புகள் தொடர்ந்தன. இதில் காந்தச் சேமிப்பகங்களை விட மலிவானதும் அதிகளவு விடயங்களைச் சேமிக்கவும் கண்டு பிடிக்கப்பட்டதே ஒளியியல் சேமிப்புக் கருவியாகும்.

தற்பொழுது பெருமளவில் பேசப்படும் "சிடி" என்பதே ஒளியியல் சேமிப்பகம் ஆகும். சிடி (CD) என்பது Compact Disk என்பதன் சுருக்கமாகும் இதனை தமிழில் ஒளியியல் வட்டு அல்லது குறுவட்டு என அழைக்கின்றனர்.

கணினியில் CD - ROM, DVD - ROM, CD- Recordable CD- Rewritable Photo CD என பல்வேறு வகையான CDக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பொழுது பெருமளவில் பாவனையில் இருக்கும் பாடல்கள், ஒளி/ஒலி "சிடி"க்களை ஒத்தவையே கணினியிலும் பயன்படுத்தப்படுகின்றன.

## ஒளியியல் சேமிப்பகம்




இவை ஏன் ஒளியியல் சேமிப்பகம் என அழைக்கப் படுகின்றன? நாம் முன்னர் பார்த்த காந்த சேமிப்பகங்கள் காந்தமாக்கலின் மூலம் தகவல்களைச் சேமித்து வைத்திருப்பவை எனக் கண்டோம். இச்சேமிப்பகங்கள் லேசர் ஒளிக்கதிர்களைப் பயன்படுத்தி தகவல்களை சேமித்து வைப்பதனால் அவை ஒளியியல் சேமிப்பகங்கள் என அழைக்கப்படுகின்றன. அதாவது ஒளித்தெறிப்பைப் பயன்படுத்தி இச் சேமிப்பகங்களில் தகவல்கள் வாசிக்கப்படுகின்றன.

லேசர் கதிர்கள் என்பது செறிவாக்கப்பட்ட ஒடுங்கிய ஒளிக்கற்றையாகும் மிகவும் சிறிய ஒளிப் பொட்டாக மேற்பரப்பில் விழக்கூடிய இக்கதிர்கள் மிகவும் சக்தி வாய்ந் தவை. இக் கதிர்கள் வில்லைகள் அரியங்கள் ஆடிகள் என்பவற்றால் வழிகாட்டிச் செல்லப்படுகின்றன. ஒளியியல் வட்டுக்களில் தகவல்கள் சேமிக்கப்படும் போது அந்தத்தட்டுக்களின் மேற்பரப்பில் அத்தகவல்களுக்கு ஏற்ப லேசர் கதிர்கள் மூலம் தட்டையானதும் வளைந்ததுமான பரப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. பின்னர் தகவல்கள் மீளப்பெறப்படுவதற்கு இத்தட்டுக்களின் மீது லேசர் கதிர்கள் பாய்ச்சப்படும் போது தட்டையான பரப்பில் படும் கதிர்கள் தெறிப்படைந்து உணரி எனும் பாகத்துக்கு செல்கின்றன. வளைந்த பரப்பில் படும் கதிர்கள் உணரிக்குச் செல்லாது



டிவிடி - றொம்

**சி. சிவபாலன்**

சிதறுகின்றன. எனவே இங்கும் இருநிலைகள் காணப் படுகின்றன. அதாவது உணரிக்கு கதிர்கள் தெறிப்படைந்து செல்லும் போது 1 - நிலை எனவும் சிதறும் கதிர்கள் O - நிலை எனவும் கொள்ளப்படுகின்றன.

இவ் ஒளியியல் வட்டுகள் அதற்குரிய வட்டு இயக்கியில்இடப்பட்டு இயக்கும் போது வேகமாகச் சுழற்றப்படும் அதேவேளை அத்தட்டுக்கள் மீது லேசர் ஒளிக்கற்றைகள் பாய்ச்சப்படுகின்றன இதன்போது அக்கதிர்கள் தெறிப்படையும் சிதறும் நிலைகளைக் கொண்டு தகவல்களை கணினி புரிந்து கொள்கிறது..


கணினியில் பயன்படுத்தப்படும் CD-ROM ஒன்று 650MB கொள்ளளவு உடையதாகும் (31/2 அங்குல நெகிழ்வட்டு 1.44 MB கொள்ளளவுடையது) அதேவேளை வன்தட்டு இயக்கிகளை விட இவை வேகம் குறைந்தவையாகும்.CD-ROM இல் பதிவு செய்யப் பட்ட தகவல்களை மிக நீண்ட காலம் வைத்திருந்து எத்தனை முறை வேண்டுமானாலும் உபயோகித்துக்கொள்ள முடியும். இவ் ஒளியியல் வட்டுக்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், படங்கள், இசை, திரைப்படங்கள் மற்றும் பெருமளவான தகவல்களைச் சேமித்து வைக்க உதவுகின்றன.

## DVD-ROM

DVD என்பது digital vedio disk என்பதன் சுருக்கமாகும். இது digital versatile disk எனவும் அழைக்கப்படுகிறது. இதில் மிக அதிகளவு தகவல்களை சேமித்து வைக்கமுடியும். வழமையான CDக்களை விட பலமடங்கு கொள்ளள வுடையவை. வழமையான DVD – ROM களில் 4.7 GB தகவல்களை சேமித்து வைக்கமுடியும். இருபக்கங்களையும் பதிவு செய்யப்பயன்படுத்தக்கூடிய DVD-ROMகள் 9.4 GB கொள்ளளவுடையவையாகும். விசேட DVD-ROM களில் 17GB தகவல்களைப் பதிவு செய்து கொள்ளமுடியும்.

## CD-Recordable

மேற்கூறப்பட்ட ஒளியியல் வட்டுக்கள் உற்பத்தியாளர்களால் பதிவு செய்யப்பட்ட தகவல் களைக் கொண்ட




வையாகவுள்ளன. இவற்றை வாசிக்க மட்டுமே முடியும். இவ்வட்டுக்களில் பயன்பாட்டாளர்கள் தகவல்களைப் பதிவு செய்யமுடியாது. ஆனால் CD-Recordable எனப்படும் ஒளியியல்வட்டுக்களில் பயன்பாட்டாளர்கள் தமக்குத் தேவையான தகவல்களைப் பதிவுசெய்து பயன்படுத்த முடியும். ஆனால் இவற்றில் பதிவு செய்த தகவல்களை அழிக்கவோ, மாற்றவோ முடியாது.

## CD-Rewritable device

இவ்வகைச் CDக்களில் எழுதப்படும் தரவுகளை மாற்றி எழுதமுடியும் நெகிழ்வட்டுக்கள், வன் தட்டுக்கள் போன்று புதிய தகவல்களைச் சேர்க்கவும் தகவல்களை நீக்கவும் முடியும்.



சீடி- றீறைற் டிறைவ்

---

- பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் -

# ஆசிரியர்களின் அசமந்தப் போக்கினால் மாணவர்கள் பெரும் திண்டாட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கல்விச் சீர்திருத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள கணிப்பீட்டு முறையில் ஆசிரியர்கள் கைக்கொள்ளும் செயற்பாடுகளில் மாணவர்கள் பெரும் சுமையையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்டுள்ளனர். புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைமட்டக் கணிப்பீடு கூடுதலான பாடசாலைகளில் அவசர அவசரமாக ஒருசில தினங்களில் நடாத்தப்பட்டுவருகிறது.

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக முதலாம் தவணை ஆரம்பத்தில் இருந்து முதலாம் தவணை இறுதிவரை நடத்தப்பட வேண்டிய அலகு ரீதியான கணிப்பீடுகள் ஓரிரு நாட்களில் நடத்தி முடிக்கப்படுவதனால் மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து நிற்கின்றனர். அத்தோடு, அவர்களால் ஆசிரியர்களின் வேகத்திற்கு ஏற்றவகையில் செயற்பட முடியாமல் திணறிக் கொண்டிருப்பதையும் காணமுடிகிறது.

# செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் ஆராய்வு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இன்று பகல் 3 மணிக்கு திருமலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தலைவர் எஸ். தண்டாயுதபாணி (அதிபர்) தலைமையில் நடைபெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர் நியமனம், உயர்தர சித்தி பெற்ற ஆசிரியர் நியமனம், வெள்ள நிவாரண முற்பணம், ஆசிரிய இடமாற்றத் திட்டம், பதவி உயர்வின் அநீதி, இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பளம் உள்ளிட்ட பல விடயங்கள் இதில் ஆராயப்பட வுள்ளன.

# நாட்டில் பெற்றோலிய வளமுள்ளதா? இது தொடர்பாக விரைவில் ஆய்வு

## அமைச்சர் கருஜெயசூரிய தகவல்

நாட்டின் கரையோரப் பகுதியில் பெற்றோலிய வளங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காக ஆராய்ச்சிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என சிறிலங்காவின் மின்சக்தி, எரிபொருள் துறை அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் அங்கு அது குறித்து மேலும் குறிப்பிடுகையில்:

இவ் விடயம் தொடர்பான சட்டமூலம் இரண்டு மாத காலத்தினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும் ஆய்வுகளை நடத்தும்படி வெளிநாட்டு நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

# சிறந்த விவசாயிகளாக தெரிவானோர் கௌரவிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் 2002/2003 இற்கான சிறந்த விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்டோருக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த விவசாயிகளுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவிக்கிறது. (பா)

## தென்னங்கன்று வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கிளி/மாவட்டத்திற்குட்பட்ட மக்களுக்கு இலவசமாகத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி நிறுவனத்தினால் மருதநகர், மாயவனூர், சம்புக்குளம், பாரதிபுரம், அக்கராயன், காந்திக்கிராமம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு தலா இரண்டு தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. (பா)

# முல்லை நகர வைத்தியசாலை ஒரு வாரமாக இயங்கவில்லை

## -அம்புலன்ஸ் சேவையும் நிறுத்தம்

(முல்லைத்தீவு)

**முல்லை நகரிலுள்ள கட்டம்-1 வைத்தியசாலை கடந்த ஒரு வார காலமாக இயங்காதிருப்பதனால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை கட்டம்-1 கடந்த 24-02-2003 தொடக்கம் வைத்தியர் இல்லாத காரணத்தால் மூடப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவுப் பகுதியில் மக்கள் பெருமளவாக மீளக் குடியேறி வருவதால், அடிப்படைத் தேவைகளில் ஒன்றான, இவ் வைத்தியசாலை இவ்வாறு செயலற்றுக் காணப்படுவதால், நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர் அதுமட்டுமல்ல, அவசர நோயாளர் சேவைக்கான வாகனம் (அம்புலன்ஸ்) பழுதடைந்து காணப்படுவதால் அவசர நோயாளர்களைப் போக்கு வரத்துக்காக பேருந்திலே சிரமத்துடன் சிகிச்சைக்காக எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கருத்தில் கொண்டு முல்லை நகரத்திற்குரிய முல்லை மாவட்ட கட்டம்-1 வைத்தியசாலை நல்ல முறையில் செயற்பட உதவ வேண்டுமென மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் வைத்திய சாலைக்குச் சென்ற நோயாளர் ஒருவரை எமது செய்தியாளர் கேட்ட போது அவர் தெரிவிக்கையில்; "கடந்த 25ம் திகதி சிலாவத்தை பகுதியிலிருந்து கடும் காச்சலுக்கு மருந்து எடுப்பதற்காக வந்தேன். ஆனால், வைத்தியர் இன்று இல்லை என, திரும்பி வீடு சென்று மறுநாளும் சென்றேன். அதே நிலைதான். மீண்டும் மூன்றாம் நாளான இன்றும் வந்தேன். ஆனால் நிலைமையை தாங்கள் நேரில் பார்க்கின்றீர்கள் தானே. இவ் வைத்திய சாலையை வேண்டா வெறுப்புடன் நடத்துவதாக எமக்குத் தெரிகிறது. இவ் வைத்திய சாலையை நம்பித்தான் நாம் எமது பகுதிகளில் வசித்து வருகின்றோம் இந் நிலை தொடருமானால் பல நோயாளர்கள் உயிர் ஆபத்தை எதிர் நோக்க வேண்டிவரும்" என்றார். (20)



புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியின் 4ஆம் கட்டைப் பகுதியில் கடந்த 27-ஆம் திகதியன்று மோட்டார் சைக்கிள் - ஹைஏஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் சேதமடைந்தஹை-ஏஸ் வாகனத்தை படத்தில் காண்க (பா)

## பழைய மாணவர் பொதுக் கூட்டம்

வவுனியா கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 8 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

மேற்படி பொதுக் கூட்டத்திற்கு பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார். (பா)

## திறனாய்வுப் போட்டி

தண்ணீரூற்று இந்து தமிழ்க்கலவன்பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி நிகழ்வு கடந்த புதனன்று பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி த.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

சேரன், சோழன், பாண்டியன், கரிகாலன் ஆகிய நான்கு இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற திறனாய்வுப் போட்டியில் சோழன் இல்லம் முதலாம் இடமாகவும் பாண்டியன் இல்லம் இரண்டாம் இடமாகவும் சேரன் இல்லம் மூன்றாம் இடமாகவும் தெரிவாகி பரிசளிப்புகள் இடம் பெற்றன. (ஆ)

# பயணிகள் பேருந்து சேவையை அதிகரித்துத் தர வேண்டுகோள்

மாங்குளத்திற்கும் முல்லைத் தீவிற்கும் இடையில் போக்கு வரத்துக்கென பேருந்து இல்லாமையினால் மக்கள் பெரும் சிரமடைகின்றனர். புதுக்குடியிருப்பிலிருந்து புளியங்குளத்திற்கு மாங்குளம் ஊடாக ஆறு பேருந்துகள் முன்னர் ஓடின. ஆனால் தற்போது ஒரு பேருந்தே ஓடுகின்றது.

இதனால் மணவாளன் பட்டமுறிப்பு, கரிபட்டமுறிப்பு ஆகிய பகுதி மாணவர்கள் , அரச உத்தி யோகஸ்தர்கள் நோயாளிகள் ஆகியோர் பயணத்தை குறிப்பிட்ட நேரத்திற்குள் சென்றடையமுடியாதமையினால் சேவையினை அதிகரித்துத் தருமாறு மக்கள் கோருகின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு அரச அதிபர் செயலகம் முல்லைத்தீவில் மீண்டும் இயங்குவதால் பனிக்கன்குளம், மாங்குளம், மணவாளன்பட்ட முறிப்பு, கரிபட்டமுறிப்பு பகுதி மக்கள் அரச செயலகத் திற்கு உரிய நேரத் திற்குள் செல்ல முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (05)

# பற்றாக்குறையால் பாடசாலை எதிர்கொள்ளும் அவலம்

(முள்ளியவளை)

தண்ணீரூற்று மு/ இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையுடன்கட்டட, தளபாட பாடப்புத்தக பற்றாக்குறைகளினால் பெரும் அவலநிலை உருவாகியுள்ளது என மேற்படி பாடசாலை அதிபர் திருமதி த. செல்வரத்தினம் தெரிவித்தார்.

விஞ்ஞானம், கணிதம், சங்கீதம், நடனம், சமயம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை. தரம் 01 தொடக்கம் தரம் 9வரையான வகுப்புக்களைக் கொண்டுள்ள 610 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் தற்போது 10 நிரந்தர ஆசிரியர்களும் 02 பகுதி நேர ஆசிரியர்களுமே கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை போதிய தளபாடம் அற்ற நிலையில் மாணவர்கள் பாய்களிலும் கட்டடவசதி அற்றநிலையில் மரநிழல்களிலும் தமது கற்றலை மேற்கொண்டு வருகின்றனர் தரம் 9 வகுப்பு மாணவர்களுக்கான தமிழ்ப்பாடப் புத்தகம் இது வரை கிடைக்கவில்லை.

இவ்வாண்டு பாடசாலை ஆரம்பமாகி 2மாதங்களை எட்டி பிடிக்கும் நிலையில் இதுவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் எமது பாடசாலையின் அவல நிலையை எட்டிப்பார்க்கவில்லை.

விஞ்ஞான உபகரணங்கள் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளன. ஆனால் விஞ்ஞான ஆய்வு கூடமோ அதற்கு வசதியான கட்டடங்களோ இல்லை. மிக நெருக்கடியான சிறு அறை ஒன்றுதான் அதிபர் அலுவலகமாகவும் பாடசாலை உபகரணங்கள் வைக்கப்படும் களஞ்சியமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலை தொடருமானால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும் என அதிபர் தெரிவித்தார். (ஆ)

# மாதர் சங்க கலந்துரையாடல்

பூநகரி பிரதேசத்தில் அண்மையில் அப்பிரதேச பெ.மே. பொறுப்பாளர் . கரிகாலனின் ஒழுங்கு படுத்தலில் ஆலங்கேணி கிராம மாதர் சங்கக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

மாதர்சங்கத்தலைவியின் தலைமையில் கலந்துரையாடல் ஆரம்பமானது. இதில் மாதர் சங்கம் தொடர்பான கருத்துக்களை கிளி. மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் வழங்கினார்.

தொடர்ந்து கிராமத்தின் தேவைகளை இனம் காண்பதில் மாதர்சங்கத்தின் பணிகள் குறித்து கிராம அலுவலகரால் விளக்கப்பட்டது. தொடர்ந்து மாதர்சங்க உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின் கலந்துரையாடல் நிறைவுபெற்றது.

# கைதான தமிழ் இளைஞர்களை கனடா நாடு கடத்த முயற்சி

கனடாவின்ரொரான்ரோவில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் 75 வீதமானவர்கள் நாடு கடத்தப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களை நாடு கடத்தும் உத்தரவு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் கூறினர். இவர்களில் பெரும்பாலானவர்கள் நாடுகடத்தலுக்கு எதிராக மேன்முறையீடு செய்திருப்பதால் இன்னமும் எவரும் நாடுகடத்தப் படவில்லை.

கைது செய்யப்பட்ட 39தமிழ் இளைஞர்களில் 05பேர் மட்டுமே தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 2001ஆம் [illegible]க்டோபர் மாதம் இந்த இளைஞர்கள் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தனர்.

# நாட்டில் பெற்றோலிய வளமுள்ளதா? இது தொடர்பாக விரைவில் ஆய்வு

## -அமைச்சர் கருஜெயசூரிய தகவல்

(கொழும்பு)

நாட்டின் கரையோரப் பகுதியில் பெற்றோலிய வளங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காக ஆராய்ச்சிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என சிறிலங்காவின் மின் சக்தி எரிபொருள் துறை அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் அங்கு இது குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

இவ் விடயம் தொடர்பான சட்டமூலம் இரண்டு மாத காலத்தினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்த சட்டமூலம் நிறைவேற்றப் பட்டதும் ஆய்வுகளை நடத்தும்படி வெளிநாட்டு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படும் என்றும் கூறினார்.



பின்வந்த பண்டுவர என்னும் இடத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் ரயில்வே பாலம் ஆறுமாதங்களுக்கு மட்டுமே உத்தரவாதம் அளித்து ஒரு வருடத்திற்கு முன் அமைக்கப்பட்டது. சிலிப்பர் கட்டைகளின் ஆதாரத்துடனேயே ரயில்கள் ஓடுகின்றன.



**சிந்தனைக்கு**

நாங்கள் ஒரு உன்னத இலட்சியத்திற்காகப் போராடி வருகின்றோம். அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும், வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.


ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 04-03-2003


## நம்பிக்கையீனம்!

சிறிலங்கா ஆயுதப் படையில் இருந்து இதுவரையில் 60,000 க்கும் அதிகமான படையினர் தப்பியோடியுள்ளதாக சிறிலங்கா இராணுவத் தரப்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு தப்பியோடியவர்களில் அதிகமானோர் 2002 ஆம் ஆண்டிலேயே ஓடியுள்ளதாகவும் தெரிவிக்கின்றன. இத்தகவலின்படி 2002 இல் 7343 படையினர் தப்பியோடியுள்ளனர்.

சிறிலங்கா அரசிற்கும் – விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஒன்று பெரும்பாலும் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் – அதாவது, யுத்த அபாயம் நீங்கிய சூழலில் இவ்வாறு படையினர் தப்பியோடுதல் என்பது சற்று அதிர்ச்சிக்குரியதொன்றே ஆகும். அதாவது, பெரியளவிலான கல்வியறிவு எதுவும் தேவையற்ற நிலையில், உயர் சம்பளம், உச்ச சலுகைகள் கிடைக்கப்பெறும் தொழில் ஒன்றைக் கைவிட்டு ஓடுதல் என்பது சிந்திக்க வேண்டியதொரு விடயமே ஆகும்.

சிறிலங்கா ஆயுதப் படையினர் தப்பியோடுதல் என்பது 1992 இல் ஆரம்பித்ததொன்றாகும். விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சியே இவ்வாறு அவர்கள் ஓட்டம் எடுக்க ஆரம்பித்தனர். அன்று யுத்தச் சூழ்நிலையில் தொடங்கிய இவ் ஓட்டமே படிப்படியாக அதிகரித்து இன்று யுத்தம் அற்றதொரு சூழ்நிலையிலும் அவர்கள் தப்பியோடிய வண்ணம் உள்ளனர்.

சிறிலங்கா ஆயுதப்படைகளில் இணைந்து கொண்டவர்கள் பெரும்பாலும் கிராமப்புறத்து ஏழை விவசாயிகளின் பிள்ளைகளே ஆகும். பெரும் கல்வியறிவின்றி சாதாரண ஏழைக் குடும்பத்தில் இருந்து வந்தவர்களே அவர்கள். இவ் இளைஞர்கள் கவர்ச்சிகரமான சம்பளம், சலுகைகள் என்பனவற்றை மனதிற்கொண்டே ஆயுதப் படையில் இணைந்து கொண்டனர்.

ஆனால், இவ்வாறு இருந்தும் ஆயுதப் படையில் இருந்து தப்பி ஓடுவதற்குக் காரணம் ஒன்றாகவே இருக்க முடியும். அதாவது, இனியொரு யுத்தம் மூளும் பட்சத்தில் தமக்கு ஏற்படக் கூடிய உயிராபத்துக் குறித்து அவர்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். அவ்வாறு இல்லாதுவிடில், இவ்வாறு தப்பியோடியிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கமாட்டாது.

அதாவது, யுத்த நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது இனி ஆயுதப் படையினருக்கான சம்பளம், சலுகைகள் என்பன குறைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு என அரசாங்கமோ வேறு எவருமோ கூறவில்லை. அத்தோடு, பாதுகாப்புச் செலவீனத்தில் பெரும்வெட்டுக்கள் எதையும் செய்து ஆயுதப் படையினருக்குச் சந்தேகங்களையும் அரசாங்கம் ஏற்படுத்தவில்லை.

மாறாக, அரசாங்கம் இராணுவத்தை நவீன மயப்படுத்துவதிலும், தொழில்சார் திறமைமிக்கதாகவும் ஆக்குவதிலேயே அக்கறை காட்டுவதாகவுள்ளது. இவ்வாறானதாக இருந்தும் ஆயுதப் படைத் தரப்பில் இருந்து இன்னமும் தப்பியோடுபவர்கள் அதிகரித்த போக்கிலேயே இருப்பதெனின், கடந்த காலத்தில் நிலவிய யுத்த அபாயத்தில் இருந்து அவர்கள் இன்னமும் விடுபடவில்லை என்பதையே இது காட்டுவதாய் உள்ளது.

இந்நிலையானது, சமாதானத்தின் மீது ஆயுதப் படையினருக்கு நம்பிக்கையூட்ட அரசாங்கம் தவறிவிட்டது என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அவ்வாறு இல்லாதுபோனால் ஆயுதப் படை வட்டாரத்தில் யுத்தத்திற்கு ஆதரவான சக்திகளின் கை வெகுவாக ஓங்கிவிட்டதன் விளைவாகவே இதனைக் கொள்ள வேண்டியுள்ளது.

அதாவது, ஏதோ ஒரு வகையில் யுத்தம் வரும் என ஆயுதப் படைத் தரப்பில் கருதப்படுவதே இத்தகைய தப்பியோடுதலுக்குக் காரணமாகும். ஆகையினால், சமாதானம் குறித்த நம்பிக்கையை ஆயுதப்படைத் தரப்பில் வலுவடையச் செய்வதில் அரசாங்கம் தவறிவிட்டது என்றே கருத வேண்டியுள்ளது. மக்கள் மத்தியிலும் இத்தகையதொரு நிலை உருவாகுமானால், சமாதான முயற்சிகளில் அரசாங்கம் வெற்றி பெறுவது கடினமாகிவிடும். ஆகையினால், சமாதான முயற்சிகள் வெற்றியடையும் என்ற நம்பிக்கையை சகல மட்டத்திலும் ஏற்படுத்த அரசாங்கம் விரைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சமாதானத்தின் மீது ஏற்படும் அவநம்பிக்கையை அரசாங்கத்தால் தடுத்து நிறுத்த முடியாதுபோய்விடும்.

# புத்திகெட்ட பிக்குகள் குழுவினரே சமஷ்டிக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர்

## - அத்தங்கனே ரத்னபால கூறுகிறார்

(கொழும்பு)

புத்தியில்லாத பிக்குகளே இன்று சமஷ்டி முறையை ஆதரித்து வாழ்த்துகின்றனர் என கண்டியில் நடைபெற்ற "நாட்டைப் பாதுகாக்கும் பிக்குகளின் சம்மேளனத்தின்'' அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம பிக்குவான அத்தங்கனே ரத்னபால கூறியிருக்கிறார்.

தலதா மாளிகை வளாகத்தில் நடைபெற்ற மேற்படிக் கூட்டத்திற்கு தேசிய பிக்குமார் சங்கச் செயலாளர் உட்பட மேலும் பல பிக்குகளின் அமைப்பின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

அவர் அங்கு மேலும் பேசுகையில; அரசுக்கு ஒத்துப்பாடும் பிக்குகள் நாட்டையும் மக்களையும் காட்டிக் கொடுப்பவர்கள் என்றும் சமாதானத்துக்கு வாழ்த்து கூறுபவர்கள் என்றும் கூறியுள்ளார்.

இந்த நாடு தற்போது நெருக்கடியான நிலையில் இருக்கிறது. இந்நியையில் பிக்குமார்கள் தமது பொறுப்புக்களில் கவனம் எடுத்து இந்த நாட்டின் அழிவைப் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். சில பிக்குமார்கள் புத்திகெட்டு சமஷ்டிக்கு ஆதரவு அளிக்கின்றனர் என்றார்.

கிழக்குப் பிரதேசத்தில் இருந்து வந்து கலந்து கொண்ட கும்புகடவல தீரானந்த பிக்கு கருத்துத் தெரிவிக்கும்போது; நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு அவ்வாறான சிந்தனை நீங்க வேண்டும் என பிரார்த்திக்கும் நோக்கிலேயே தாம் வந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாடு பிரிந்து சின்னாபின்னப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார் - விடுதலைப்புலிகளினால் நிறையத் தவறுகள் ஏற்படுவதால் சமாதான முயற்சிக்கு பாதகம் ஏற்படுவதாகவும் அரசாங்கம் அதற்குப் பழக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ள அவர் இன்று இருப்பது சமாதானமல்ல யுத்தநிறுத்தம் மட்டுமே எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சிறிலங்கா மின்சார சபையை புனரமைப்பது குறித்து அரசு அக்கறை

(கொழும்பு)

சிறிலங்கா மின்சார சபையை புனரமைப்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

சிறிலங்காவின் எரிபொருள், மின்சக்தி அமைச்சு இதன் புனரமைப்புக் குறித்து அக்கறை கொண்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மின்சார சபை திறமையாகவும் இலாபகரமாகவும் செயற்பட வேண்டுமானால் அது புனரமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது என அமைச்சர் கரு ஜெயசூரிய கூறுகிறார்

அதேவேளை, அரசின் புனரமைப்பு நடவடிக்கை தொடர்பாக மின்சார சபை ஊழியர்களிடையே அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது பதவிகளை இழக்க நேரிடும் என அவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

# சனாதிபதி சட்டத்தரணிக்கு கொலை மிரட்டல்

## தலைமை நீதிபதியின் ஆதரவாளர் பின்னணி!

(கொழும்பு)

சனாதிபதியின் சட்டத்தரணி டெஸ்மன் பர்ணாந்துக்கு எதிராக கொலை மிரட்டல் செய்தவர் தலைமை நீதிபதியின் ஆதரவாளர் ரோகண குமார என சி.ஐ.டி. திணைக்களம் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக மனித உரிமை மனுத்தாக்கல் செய்த நீதிபதிகள் இருவருக்கும் கொலைப் பயமுறுத்தல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேற்படி சந்தேக நபரான ரோகண குமார பல குற்றச் செயல்களையும், கொலைகளையும் செய்தவர் எனவும் பொலிசாரால் தேடப்பட்டுவந்த நிலையில் தலைமறைவாகி இருந்தவர் எனவும், இவர் தலைமை நீதிபதிக்குப் பல வழிகளிலும் ஆதரவளித்தவர் எனவும் குறிப்பாக, இவரின் வீட்டுக்கும் சென்று வருவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை தொடர்பான இந்திய அரசின் கொள்கையில் மாற்றம் வேண்டும்

## ம.தி.மு.க. தீர்மானம் நிறைவேற்றம்

ஈழத் தமிழர்களுடன் தொப்புழ்க்கொடி உறவு கொண்டுள்ள ஆறு கோடித் தமிழர்களைக் குடிமக்களாகக் கொண்ட இந்தியா இப் பேச்சுவார்த்தை வெற்றிபெற ஆக்கபூர்வமாக உதவிட முன்வர வேண்டும்.

அத்துடன் அமெரிக்கா, சீனா இப் பிரச்சினையில் தீவிர அக்கறை காட்டிவரும் நிலையில் இந்தியாவின் பூகோள அரசியல் நலன்களைக் கருத்தில் கொண்டு பிரதமர் இந்திரா காந்தி காலத்துக்குப் பிறகு இலங்கைப் பிரச்சினையில் பின்பற்றி வருகின்ற வெளிநாட்டுக் கொள்கையை இந்திய அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டியது வரலாற்றுக் கட்டாயம் ஆகும்.

இலங்கை தொடர்பான தனது கொள்கையை இந்திய மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென வலியுறுத்தி மறு மலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் போர் நிறுத்தம் அறிவித்து கடைப்பிடித்து வருவதால், ஓராண்டு காலமாக இலங்கையில் குறிப்பாக தமிழர்கள் வாழும் பகுதிகளில் அமைதி நிலவுகின்றது.

இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையை நேர்வே, ஜேர்மனி, தாய்லாந்து ஆகிய நாடுகளில் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர்.

அமெரிக்கா,ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, சீனா, தென்னாபிரிக்கா, மாலைதீவு ஆகிய நாடுகளும்,உலக வங்கியும் பேச்சுவார்த்தை வெற்றி பெறவும், ஈழத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் புனர்வாழ்வுக் கட்டமைப்பிற்குப் பெருமளவில் நிதி வழங்கி உதவிடவும் முன்வந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் இப் பேச்சுவார்த்தை வெற்றிபெற வாழ்த்தியதோடு, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கவும், தமிழீழப் பகுதிகளைப் பார்வையிடவும் முன்வந்துள்ளமையும் மனித குலத்தின் மதிப்பிற்குரிய தலைவர் நெல்சன் மண்டேலா இப் பேச்சுவார்த்தை வெற்றிபெற முழு அளவில் தான் உதவிட முன்வருவதாக அறிவித்துள்ளமையும், நம்பிக்கையூட்டுகின்றன.

### நிரந்தர நியமனம் கோரி

# வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சின் முன் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று மறியல்

(திருமலை)

தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்று முதல் திருகோணமலையில் உள்ள வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக் காலை அங்கு சென்ற மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முந்நூறிற்கும் மேற்பட்ட தொண்டராசிரியர்கள் இப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அச்சமயம் அங்கு வந்த சிறிலங்கா பொலிசார் அவர்களை அங்கிருந்து பலவந்தமாக அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனாலும் கல்வி அமைச்சுக்கு அருகாக இருந்து தொடர்ந்தும் அவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட இவர்களை பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், துரைரட்ணசிங்கம் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

நேற்று மாலையில் தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்து தமது கோரிக்கையினை வலியுறுத்தினர். இதற்குப் பதிலளித்து மாகாண அமைச்சின் செயலாளர் கருத்துக் கூறும் போது,

தொண்டராசிரியர் தொடர்பான விபரங்கள் மத்திய கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான அனுமதியினை கோரி திறைசேரிக்கு கல்வி அமைச்சினால் கடிதம் அனுப்பப்பட்டது. திறைசேரி இதற்கான பதிலெதனையும் வழங்கவில்லை எனத் தெரிவித்தார்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வரை தொடர்ந்தும் மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தொண்டர் ஆசிரியர்கள் அறிவித்துள்ளனர். (25)

## ஜப்பான் உயர் மட்டக்குழு நேற்று திருமலை விஜயம்

ஜப்பானின் உயர்மட்டக்குழுவொன்று நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளது.

ஜப்பானைச் சேர்ந்த கட்டுமான அபிவிருத்தி நிறுவனத் தூதுக் குழுவினர் அங்கு சென்று மாகாண சுகாதார அமைச்சு கேட்போர் கூடத்தில் மாநாடு ஒன்றினை நடத்தினர்.

இம்மாநாட்டில் வடக்கு-கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இம்மாவட்டத்தின் நீண்ட காலத் தேவைகள் குறித்து இங்கு அறிக்கைத் திட்டங்கள் சம்ர்ப்பிக்கப்பட்டன.

பாவிக்கப்படாதிருக்கும் திருகோணமலை - மட்டக்களப்பு வீதி புனருத்தாரணம்,மாவட்டத்துக்கான எதிர்கால குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மகாவலித் திட்டத்தில் இருந்து குடிநீர் விநியோகிக்கக் கூடிய பாரிய திட்டத்தை அமுல் படுத்தல், திருமலை - கொக்கிளாய் வீதியை புனரமைத்தல் ஆகிய' முக்கிய திட்டங்களும் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (25)

### உலகக்கிண்ணப் போட்டி

## நியூசிலாந்து -சிறிலங்கா சுப்பர் சிக்ஸிற்குள் நுழைவு

### நமீபியாவை நெதர்லாந்து தோற்கடித்தது

தென்னாபிரிக்க அணிக்கும் சிறிலங்கா அணிக்குமிடையிலான முக்கிய போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா அணி முதல்துடுப்பெடுத்தாடியது. இதன் போது ஐம்பது ஓவர்களில் ஒன்பது விக்கட் இழப்பிற்கு 268 ஓட்டங்களைப் பெற்றது.

சிறிலங்கா அணியைச் சேர்ந்த அத்தபத்து 125 ஓட்டங்களையும், அரவிந்த டி சில்வா 75 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இதனையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 45 ஓவர்களில் ஆறு விக்கட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட நிலையில் மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. பின்னர் ஆட்டம் சம நிலையில் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் தென்னாபிரிக்கா அணி சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசிக்கும் தகுதியை இழந்தது. சிறிலங்கா அணி 18 புள்ளிகளோடு 'பி' பிரிவினுள் முதலிடத்தைப் பெற்று சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசித்தது.

இதேவேளை, நியூசிலாந்துக்கும் கனடாவுக்கும் இடையிலான போட்டியில் ஐந்து விக்கட்டுக்களால் நியூசிலாந்து அணி வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத் தாடிய கனடா அணி 47 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப்பெற்றது.

நியூசிலாந்து அணி 23 ஆவது ஓவரில் வெற்றி இலக்கை எட்டியது.

நமீபியாவிற்கும் நெதர்லாந்திற்குமிடையிலான மற்றொரு ஆட்டத்தில் நெதர்லாந்து அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 50 ஓவர்களில் 314 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நமீபிய அணி 46.5 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங்களைப்பெற்றது.

## சக சிப்பாயின் சூட்டிற்கு விமானப் படைச் சிப்பாய் பலி!

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படைச் சிப்பாய் ஒருவர் சக சிப்பாயினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் ஹிங்குராங்கொட விமானப் படைத் தளத்தில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இவர் கடமையில் இருந்தபோதே சக சிப்பாய் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்திய சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வடபகுதி மக்கள் சமாதானத்தின் பலனை முழுமையாக அனுபவிக்கவில்லை

### ஒப்புக்கொள்கிறார் பிரதமர் ரணில்

(கொழும்பு)

தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகளின் மூலம் கிடைத்துள்ள பலன்களை வடபகுதி மக்கள் முழுமையாக அனுபவிக்கவில்லை என்று விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளமை உண்மை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தியாவில் 'இந்திய ருடே' சஞ்சிகை கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

யுத்தத்தினால் வடக்கு - கிழக்கு நிர்வாகக் கட்டமைப்பு முற்றாக செயலிழந்துள்ளது. இதனை மிகக்குறுகிய கால இடைவெளியில் கட்டியெழுப்ப முடியாது. இருந்தும் வெகுவிரைவில் வடக்கு - கிழக்கை வழமைக்குக் கொண்டு வரத்தேவையான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறியுள்ளார்.

### உழவு இயந்திரம்...

இவர்கள் பயணம் செய்த துவிச்சக்கர வண்டி முற்றாக சேதமடைந்துள்ளது.

இவ்விபத்து நேற்றுப் பகல் 11.25 மணியளவில் கிளி. நீதிமன்றத்திற்கு அண்மையில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

முன்னே சென்றுகொண்டிருந்த துவிச்சக்கர வண்டியை பின்னால் சென்ற உழவு இயந்திரம் மோதியதையடுத்து பின்னால் சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து உழவு இயந்திரத்துடன் மோதியது. இதன்போது நிலத்தில் வீழ்ந்த துவிச்சக்கர வண்டியும் அதில் பயணித்த இரு பெண்களும் உழவு இயந்திரத்தின் கீழ் சிக்குண்டனர். கல்பனாவின் மீது உழவு இயந்திரத்தின் சில்லு ஏறியது. அவர் நசியுண்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய பெண் இரு சில்லுகளுக்குமிடையிலிருந்து படுகாயங்களுடன் மீட்கப்பட்டார். படுகாயமடைந்தவர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இவ் விபத்து நடத்த இடத்திற்கு உடன் விரைந்த கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்ற நீதியாளர் செந் தூரன் காயமடைந்தவர்களையும் வாகனங்களையும் பார்வையிட்டதுடன், இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு நீதி மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்து பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஏ-9 வீதியின் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன. இவ்விபத்துக்கள் பற்றி நேற்று எமது செய்தியாளரிடம் தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பாளர் தெரிவிக்கையில்,

இதுவரை நடந்த வீதி விபத்துக்களுக்கு வாகன சாரதிகளின் கவனயீனமே காரணம் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்றார்.

### இந்திய - மன்னார்...

இதனால் விசனம் அடைந்த மன்னார் மீனவர்கள் அவர்களுடன் மோதலில் ஈடுபட்டதுடன் அவர்களின் 14 வள்ளங்களையும் 64 பேரையும் பிடித்து வந்துள்ளனர்.

பிடிக்கப்பட்டவர்கள் அனைவரும் தற்போது பேசாலை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தமிழக மீனவர்கள் மீனினத்துக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய, தமிழகத்தில் தடை செய்யப்பட்ட ஆபத்தான உபகரணங்களைப் பாவித்து மன்னார்ப் பகுதிக்கு வந்து மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மன்னார் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் கருத்துக் கூறும்போது,

எமது பகுதிகளில் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் அத்துமீறி வந்து கடற்தொழிலில் ஈடுபடுவதுடன் எமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் அபகரித்துச் செல்கின்றனர். இதனால் எமது மீனவர்கள் பெரும் இன்னல்களை அனுபவிப்பதுடன் தொடர்ந்தும் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது!

இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துக்குப் பல தடவைகள் எடுத்துக் கூறியும் எதுவித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அரசாங்கத்தின் இந்நடவடிக்கையில் இப்பகுதி மீனவர்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர் எனத் தெரிவித்தார். (மி)

### தேசியத் தலைவர்...

குறித்து விரிவாகப் பேச்சுக்களை நடத்தினர்.

இச்சந்திப்பின் போது களநிலை யதார்த்தம் பற்றியும் போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் இன்னும் சிறிலங்கா அரசாங்கத்தினால் நிறைவேற்றப் படாத விடயங்கள் பற்றியும் அரசியல் ஆலோசகருக்கு எடுத் துக்கூறிய தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளுக்கு விரை வில் தீர்வு காண வேண்டும் என வரும் பேச்சுவார்த்தையில் வலியுறுத்துமாறு எடுத்துரைத்துள்ளனர்.

மேலும் இச்சந்திப்பில் சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் வரும் சுற்றுக்களில் மேற்கொண்டு பேசப்படவேண்டிய விடயங்கள் பற்றியும் அடுத்தகட்ட இராஜதந்திர நகர்வுகள் குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்தியுள்ளனர் எனவும் அறியவருகிறது.

### 103 போராளிகள்...

யாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகிறது.

இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா, விசேட தளபதி ரமேஸ், மகளிர் படையணி தளபதி நிலாவினி, தளபதிகளான ராம், மற்றும் றொபேட் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

### ஜேர்மன் குழு...

கண்டறியவே இவர்கள் இங்கு வந்துள்ளனர்.

மன்னார், யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்த இக்குழுவினர் போரினால் பாதிக்கப்பட்ட நவாலித் தேவாலயம், முகமாலைத் தேவாலயம் உட்பட பல தேவாலயங் களையும் பார்வையிட்டுள்ளனர்.

தொடர்ந்து அனுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் இக்குழுவினர் விஜயம் மேற்கொண்டுள்ளனர்.


## கண்ணீர் அஞ்சலி

**திருமதி ஏகாம்பரம் இந்திராணி**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் செல்வி ஏரம்பு ஜெபந்தினி என்பவரது அன்புத் தாயார் திருமதி ஏரம்பு இந்திராணி அவர்களின் அகால இறப்புச் செய்தி அறிந்து கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி, வைத்திய அதிகாரிகள், அலுவலர்கள், சக ஊழியர்கள், கிளி – மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையினர் ஆகியோர் தமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தகவல்:-

கிளி.மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையினரும் ,

(7676) கிளி.மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களும்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.